DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 325/2023

Prosecution Witness 3

| | | | |
|---|---|---|---|
| Name | : அம்பிகா | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.விஜயன் | Calling | : |
| Village | : ஜோதிநகர், பொள்ளாச்சி | Religion | : |
| Taluk | : | Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of May 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது ஜோதிநகர், பொள்ளாச்சி பகுதியில் உள்ள சி காலனியில் குடியிருக்கிறேன். நான் தூய்மை பணியாளராக வேலை பார்க்கிறேன். அசா 1 எனது அம்மா, அசா 2 எனது உடன்பிறந்த சகோதரி. கடந்த 29.03.2023 அன்று நான் என்னுடைய தங்கை ஆராத்ததாள் என்பவரின் வீட்டில் இருந்தேன். அப்போது வீட்டிற்குள் நான், என் தங்கை, என் தங்கையின் குழந்தைகள் மற்றும் எனது அம்மா ஆகியோர்கள் இருந்தோம். இரவு சுமார் 9 மணியளவில் என்னுடைய அண்ணன் பிள்ளையிடம் கைபேசியில் நாங்கள் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது என் தங்கை வீட்டின் கேட்டை வேகமாக தட்டுவதுபோல் இருந்தது.

2. யார் வேகமாக தகவை தட்டுவது என்று பார்த்து கதவை திற்ப்பதற்கு நாங்கள் 3 பேரும் தகவின் அருகே வந்தோம். எனது அம்மா கதவை திறந்தவுடன் கதிர்வேல் என்ற எதிரி அருவாளுடன் நின்றுகொண்டிருந்தாள். தேவிடியா கண்டாரோழிகளா எங்களை கொல்லாமல்விடமாட்டேன்று கூறினார். அவர் என்னை அடிக்க வரும்போது என் அம்மா குறுக்கே வந்து தடுத்துவிட வந்தார். என் அம்மாவின் மீது அருவாள் பட்டுவிட்டது. இடது பக்க முதுகு பகுதி மற்றும் இடது கை மணிக்கட்டு பகுதில் வெட்டு விழுந்தது. இரத்தக்காயம் ஏற்பட்டது. வீடு முழுவதும் இரத்தமாகியது. நாங்கள் அனைவரும் சத்தமிட்டோம்.

3. அங்கிருந்த அக்கம் பக்கத்தினர் வந்தனர். எதிரியை அவருடைய மனைவி அழைத்துச்சென்றார். ஒரு ஆட்டோவை பிடித்து எனது அம்மாவை சிகிக்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனை அழைத்து சென்நோம். மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

4. எங்கள் வீட்டின் கேட்டிற்கும் எங்கள் நிலக்கதவிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சரியாக எனக்கு தெரியவில்லை. சாட்சி நீதிமன்றத்தில் நீதிபதியின் தனி அறை கதவில் இருந்து கதவின் இடது பக்கம் சாட்சி கூண்டிற்கு அருகே உள்ளபிரவுன் நிற பீரோ தூரம் இருக்கும் என்று கூறினார். சத்தம் கேட்டு யார் முதலில் சென்றது என்றால் நாங்கள் 3 பேரும் சென்றோம். கேட்டு பூட்டு போட்டு பூட்டப்பட்டிருந்ததா என்றால் தாழ்பாள் போடப்பட்டு இருந்தது.

5. எதிரி எதற்காக வந்து சத்தமிட்டார் என்றால் எதிரி மது அருந்தியிருந்தார். அவர் எதற்காக சத்தமிட்டார் என்று எங்களுக்கு தெரியாது. என்னுடைய அம்மாதான கதவை திறந்தார் என்றால் சரிதான். கதவை திறநதவுடன் எதிரி யா்ரை என்ன செய்தார் என்றால் என்னுடைய அம்மா கதவை திறந்தவுடன் எதிரி அருவாளால் அவரை ஓங்கி அடித்தார். சத்தம் கேட்டு அங்கிருந்த பொது மக்கள் வந்தார்கள் என்றால் சரிதான். எதிரி அருவாளுடன் ஓடிவிட்டாரா அல்லது அவரது மனைவி கைபிடித்து எதிரியை இழுத்து சென்றாரா என்றால் எதிரியின் மனைவி எதிரியை கையைப் பிடித்து இழுத்து சென்றார்.

6. சம்பவத்திற்குபிறகு மருத்துவமனைக்கு என் அம்மாவை எவ்வாறு அழைத்து சென்றோம் என்றால் ஆட்ோவில் வைத்து அழைத்து சென்றோம். யார் அழைத்து சென்றது என்றால் நான் மற்றும் எனது தங்கை அழைத்து சென்றோம். சம்பவம் நடந்தவுடன் போலீசார் வீட்டின் அருகே வந்துவிட்டார்கள் என்றால் போன் மூலம் தகவல் கொடுத்தவுடன் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். போலீசார் சமபவ இடம்

வந்தவுடன்தான் நாங்கள் மருத்துவமனை சென்றோம் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு இரத்தம் பீறிக்கொண்டு வந்து வீட்டு வாசலில் எல்லாம் கொட்டியதா என்றால் வீட்டிற்குள் என் அம்மாவின் இரத்தம் கொட்டியது. எனது அம்மாவின் துணியில் இரத்தக்கறை ஏற்பட்டது என்றால் சரிதான. சாட்சிதானாக முன்வந்து வீட்டின் சுவற்றிலும் இரத்தக்கறை ஏற்பட்டது என்று கூறினார்.

7. போலீசார் அனைத்தையும் குறித்துகொண்டு சென்றார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் என் அம்மாவை எத்தனை மணிக்கு சேர்த்தோம் என்றால் சுமார் ஒரு மணி நேரத்தில் மருத்துவமனை சென்றோம். என் அம்மாவிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக மருத்துவர்கள் கூறினார்களா என்றால் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றுகூறினார்கள். அதற்காகதான் சிகிக்சை எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. போலீசார் சம்பவம் நடந்த அன்று இரவே மருத்துவமனைக்கு வந்து எழுதப்பட்ட தாளில் என் அம்மாவிடம் கைரேகை பெற்றார்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் வாய் தகறாறு மட்டுமே ஏற்பட்டது என்றும் அதனை மனதில் வைத்துக்கொண்டு உள்நோயாளியாக அனுமதித்துக் கொண்டு எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி சத்தம் கேட்டு சுமார் 10, 20 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் எண்ணிக்கை தெரியாது கூட்டம் கூடியது. அவர்கள் அக்கம் பக்கத்தில் வசிக்கும் நபர்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.